**09.10.2025**

**OS.No.55/2003**
**வா.சா.2 : வெங்கடாசலம்**
**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) எனது சொந்த ஊர் மதுரை திருமங்கலம். 1 முதல் 3 வாதிகளின் சொந்த ஊரும் திருமங்கலம் தான். என்னுடைய வேலை தட்டச்சு செய்வது. நான் தனியாக தட்டச்சர் அலுவலகம் வைத்துள்ளேன். டாக்டர் விஸ்வநாதனுக்கு திருமங்கலத்தில் வீடு மற்றும் இதர சொத்துக்கள் உள்ளது என்றால் இல்லை. டாக்டர் விஸ்வநாதன் தனது தம்பி மனைவி வீட்டில் தான் குடியிருந்தார். என்னுடன் உயிலில் சாட்சி கையெழுத்து போட்டவர் யார் என்றால் சுப்ரமணியின் சொந்தக்காரர். அவர் மதுரை தல்லாகுளத்தை சார்ந்தவர். மதுரை தல்லாகுளத்திற்கும் அவரது வீட்டிற்கும் இடையே சுமார் 18 கி.மீட்டர் தூரம் இருக்கும்.

2) திருமங்கலம் ஒரு பெரிய நகராட்சி என்றால் சரிதான். அங்கு சார்பதிவாளர் அலுவலகம், நீதிமன்றம், வட்டாட்சியர் அலுவலகம், கல்லூரி ஆகியவை உள்ளது என்றால் சரிதான். அங்கு ஒரு ஹோமியோபதி மெடிக்கல் கல்லூரி உள்ளது என்றால் சரிதான். நான் சாட்சி சொல்ல வந்திருக்கும் உயிலை விஸ்வநாதன் தான் டைப் செய்தார். மேற்படி உயில் எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் 22.07.1980 ஆகும். நான் அந்த உயிலை டைப் செய்யவில்லை. பத்திர எழுத்தர் வெங்கடாசலபதி தான் டைப் செய்தார் என்று விசாலாட்சி சாட்சியம் சொல்லி உள்ளது கண்டிப்பாக தவறு தான். உயில் எழுதப்போகும் தகவலை விஸ்வநாதன் எப்போது தெரிவித்தார் என்றால் தயார் செய்ததற்கு 3 நாட்களுக்கு முன்பாக தெரிவித்தார்.

3) மேற்படி உயில் எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் பத்திரத்தாளில் எழுதப்படவில்லை. அது வெள்ளை தாளில் தான் எழுதப்பட்டது. மேற்படி உயிலை நான் ஏற்கனவே பார்த்துள்ளேன். விஸ்வநாதன், நான் மற்றும் ஜெயக்கௌரி அம்மாள் ஆகியோர் மட்டும் தான் உயில் தயார் செய்யும்போது இருந்தோம். மேற்படி உயிலை டைப் செய்ய 1/2 மணி நேரம் ஆனது. சொத்து விவரம் சொல்லிய பத்திரங்களை

நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்ததில்லை மற்றும் என்னிடம் சொல்லியதில்லை. நான் பத்திரங்களை டைப் செய்வேனா என்றால் செய்வேன். விஸ்வநாதன் வெள்ளை பேப்பரில் உயில் எழுதும்போது ஏன் வெள்ளை பேப்பரில் எழுதுகிறீர்கள் என்று நான் கேட்டேன். அவர் வெள்ளை பேப்பரிலும் எழுதலாம் என்று தெரிவித்தார். அதனால் நான் பத்திரத்தில் வாங்கி எழுத் வேண்டும் என்று நான் தெரிவிக்கவில்லை. பத்திர அலுவலகத்திற்கும் விஸ்வநாதன் வீட்டிற்கும் இடையே சுமார் 300 அடி தூரம் தான் இருக்கும். நான் உயிலை பதிவு செய்ய சொல்லி நான் கூறினேனா என்றால் இல்லை. உயிலில் முதலில் கையெழுத்து போட்டது விஸ்வநாதன் பின்னிட்டு நான் மற்றும் கடைசியாக ஜெயக்கௌரி கையெழுத்து செய்தார். விஸ்வநாதன் பேனாவை வாங்கி நான் கையெழுத்து செய்தேன். ஜெயகௌரி அம்மாளும் விஸ்வநாதன் பேனாவை என்னிடம் இருந்து வாங்கி கையெழுத்து செய்தார்.

4) என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணத்தில் விஸ்வநாதன் போட்ட கையெழுத்து புளு இங்க் அழுத்தமாக உள்ளது. நான் போட்ட கையெழுத்து புளு மையில் லேசாக உள்ளது. அவ்வாறு வரத்தான் செய்யும். ஜெயக்கௌரி அம்மாள் கருப்பு மையில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் கையெழுத்து செய்யும்போது நான் சோமசுந்தரம் தெரு திருமங்கலம் என்று எழுதி உள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் விஸ்வநாதன் டைப் செய்ததாக எங்கேனும் உள்ளதா என்றால் இல்லை. சாட்சிகள் இரண்டு பெயருக்கு முன்பாக நான் தயார் செய்கிறேன் என்ற வாசகம் இடம் பெறவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயிலை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டோம் என்ற குறிப்பு எதுவும் எழுதவில்லை.

5) 22.07.1980 என்று டைப் செய்து தான் உள்ளதே தவிர விஸ்வநாதன், நான் மற்றும் ஜெயகௌரி போட்ட கையெழுத்துக்கு கீழ் தேதி மாதம் வருடம் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். எனவே மேற்படி உயில், விஸ்வநாதனால் டைப்

செய்யவில்லை என்றும், என்னால் டைப் செய்யவில்லை என்றும், பின்னாளில் விஸ்வநாதனின் கையெழுத்தை போட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயில் பத்திரத்தில் உள்ள கையெழுத்து ஒரே நேரத்தில், ஒரே பேனாவினால் போடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் நிமித்தம் பிரதிவாதிகளிடம் இருந்து சொத்தை அபகரிப்பதற்காக மேற்படி உயில் சாசனம் உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயில் நாளது வரை அமுலுக்கு வரவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. விஸ்வநாதன் என்பவருக்கு மூன்று சகோதரிகள் ஒரு தம்பி என்றால் சரிதான். உண்மையாக விஸ்வநாதன் அவரே டைப் செய்திருந்தால் சுகஸ்தலிகிதம் என்றும் அல்லது typed by me என்றோ எழுதி இருப்பார் என்றும் அவ்வாறு இல்லாததால் மேற்படி உயிலை அவர் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3 சகோதரிகளை விட்டுவிட்டு ஒருவருக்கு மட்டும் இந்த உயிலை எழுதி வைக்க அவசியம் என்னவென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் எனது தம்பிக்கு எழுதி வைப்பதாக தெரிவித்தார்.

6) 3 சகோதரிகளுக்கு மேற்படி சொத்துக்கள் ஏன் எழுதிவைக்கப்படவிட்லலைஎ ன்று தனிப்பட்ட காரணங்கள் உயிலில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி சகோதரிகள் விஸ்வநாதனுடன் இணக்கமான முறையில் தான் இருந்தனர். ஆத்தூரில் உள்ள சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் மேற்படி உயில் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயில் விஸ்வநாதன் ஆயுளுக்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட உயில் என்று சொன்னால் சரியல்ல. சுப்ரமணியம் மற்றும் அவருடைய குடும்பத்தார் தான் விஸ்வநாதனை பாதுகாத்து பராமரித்து வருகிறார் என்ற வாசகம் இடம்பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலின் டாக்டர்.விஸ்வநாதன் பெயரில் உள்ள சொத்துக்களை அன்பினாலும் பாசத்தினாலும் (Love and affection) எழுதி வைக்கிறேன் என்ற வாசனம் எதுவும் எழுதவில்லை என்று சொன்னால் சரிதான்.

7) மேற்படி உயிலில் உள்ள 3 வது பத்தியில் (I am feeling that any litigation may arise for the succession to the following properties after my life time and as well as avoioding of any dispute or claim by any one) என்ற வாசகம் உள்ளது. தாவா சொத்தில் ஏற்கனவே பிரச்சனை உள்ளது என்பதை தெரிந்து தான் மேற்படி உயில் உருவாக்கப்பட்டது என்றும் அதற்கு நானும் ஜெயகௌரியும் உடந்தையாக இருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. டாக்டர்.விஸ்வநாதனுக்கு பாத்தியப்படாத சொத்தை இந்த உயிலில் காண்பிக்கப்பட்டுள்ளதால் இந்த உயில் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலில் 07.11.1949 ல் பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்து என்று காண்பிக்கபட்டுள்ளது. 24.11.1949 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரயப் பத்திரம் என்று சொல்லப்படவில்லை என்றால் உயிலில் சொல்லப்படவில்லை. 1 அயிட்ட சொத்து புத்திரகவுண்டம்பாளைத்தில் உள்ள 16 செண்ட் நிலம் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. புத்திரகவுண்டம்பாளையத்தில் உள்ள முதல் அயிட்ட சொத்தில் 16 செண்ட் நிலத்தை தவிர வேறு சொத்து உள்ளதாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கில் 1 முதல் 3 வாதிகள் என்ன சொத்து விவரம் காண்பித்து வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 2 வது அயிட்ட சொத்து பாகம் பிரியாத சொத்து (undivided share) என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் எவ்வளவு பாகம் விகிதம் உள்ளது என்றோ அதில் வேறு எந்த எந்த நபர்களுக்கு பாத்தியம் என்றோ விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்துகளும் விஸ்வநாதன் அனுபவத்தில் இருந்ததாக எந்த வாசகமும் உயிலில் இல்லை என்றால் சரிதான்.

8) மேற்படி 16 செண்ட்டின் நீளம் அகலம் விவரம் எதுவும் 1 வது அயிட்ட சொத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 16 செண்ட்டிற்கு நான்கு பக்கமும் செக்குபந்தி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் உள்ள இறப்பு சான்று வரதராஜீலு நாயுடு ஆத்தூர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. திட்டமிட்டு இந்த வழக்கின் நிமித்தம் மேற்படி இறப்பு சான்றிதழ், முகவரி தயார்

செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் தெரியாது. நான், விசாலாட்சி அம்மாள், ஜெயகௌரி அம்மாள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரிக்கும் நோக்கில் மேற்படி உயில் உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலும், இறப்பு சான்றிதழும் உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னல் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வராமல் கோமதி அம்மாளும் விசாலாட்சி அம்மாளும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தவறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.10.09 17:31:36 +0530

**Accidents Claim Tribunal, Attur.**